செ.வெ.எண். 02/ஜூலை செய்தி வெளியீடு நாள்: 04.07.2016

**மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 6 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்பில் விபத்து நிவாரணம் மற்றும் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**






தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (04.07.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இம்மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்கள் கோரிக்கை மனுக்களாக மேல்நிலைத் தொட்டி அமைத்தல், புதிய ஆழ்துளை கிணறு, தகனமேடை, குடிநீர் வசதி, மின் வசதி, பட்டா வேண்டுதல், கல்வி உதவி தொகை, தரைமட்ட பாலம், மூன்று சக்கர வண்டி, ஓய்வூதிய தொகை, பசுமை வீடு, பட்டா மற்றும் சிட்டா பெயர் மாற்றம், வாரிசு சான்றிதழ், ஜாதி சான்றிதழ், பேருந்து வசதி, குழந்தைகள் நல மையம், வேலைவாய்ப்பு, கல்வி உதவித்தொகை, இலவச தையல் இயந்திரம், சலவைப்பெட்டி மற்றும் வீட்டுமனை பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் மனுக்கள் என மொத்தம் 369 மனுக்களை பெற்று சம்மந்தப்பட்ட துறை அலுவலரிடம் வழங்கி உடனடி தீர்வு காண வேண்டுமென அறிவுறுத்தினார்.

முன்னதாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் பணியின் போது மின்சாரம் தாக்கி உயிரிழந்த 2 நபர்கள் நல்லம்பள்ளி வட்டம், ஏலகிரி கிராமம், காளிகவுண்டன்கொட்டாயை சேர்ந்த திரு. அனுமந்தன் மற்றும் அரூர் வட்டம், பையர்நாயக்கன்பட்டியை சேர்ந்த ரங்கநாதன் ஆகியோரின் வாரிசுதாரர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 3 இலட்சத்திற்கான காசோலையையும், தென்பெண்ணையாற்றில் நீரில் மூழ்கி உயிரிழந்த செல்வி ரம்யாவின் தாயார் திருமதி. உமாராணி என்பவருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 50 ஆயிரத்திற்கான காசோலையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 1 நபருக்கு ரூ. 5 ஆயிரத்து 700/- மதிப்பில் மூன்று சக்கர சைக்கிள், 2 நபர்களுக்கு தலா ரூ. 5 ஆயிரத்து 400/- மதிப்பில் சக்கர நாற்காலியும் (வீல்சேர்), 3 பயனாளிகளுக்கு தலா ரூ. 1,350/- மதிப்பில் காதொலிக்கருவியையும் என ரூ. 20 ஆயிரத்து 600/- மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ. சங்கர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி. மாலதி, தனி துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் செல்வி வள்ளி, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) திருமதி. பாப்பாத்தி, தனி துணை ஆட்சியர் (சிறப்புத்திட்டங்கள்) திரு. குப்புசாமி, ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் திருமதி. இலாஹிஜான், மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. மகிழ்நன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி.